**ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ - வீதி) - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 05 ஆம் திகதிய பகுதி – 1 இற்கான 3171 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை, 2015 மே 28 ஆம் திகதிய பகுதி - 2 இற்கான 3221 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3222 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் கடன் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2015 திசெம்பர் 11 ஆம் திகதிய பகுதி – 3 இற்கான 3325 - எஸ்ஆர்ஐ மற்றும் 3326 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் இலக்ககடன் உடன்படிக்கை மற்றும் 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய பகுதி – 4 இற்கான 3610 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை ஆகியவற்றின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டக் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பது நீண்டகால விளைவாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 906 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 800 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 13,780 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியளிப்புத் திட்டம் பல்வேறு பகுதி நிதியளிப்பு வசதியின் கீழ் ஆறு பகுதிகளை கொண்டிருந்ததுடன் அதில் ஐ.அ.டொலர் 557 மில்லியன் தொகையான 06 தனித்தனியான கடன் உடன்படிக்கைகள் 2022 திசெம்பர் 31 இல் 04 பகுதிகளின் கீழ் நன்கொடையாளருடன் கைச்சாத்திடப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2024 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 49,187 மில்லியன் தொகையான பூர்த்தி செய்யப்பட்ட 30 வீதிப் பொதிகளின் சிவில் வேலை செலவின கிரயத்தை நிகழ்ச்சித்திட்டம் மூலதனமாக்கியிருந்த போதிலும் அந்த 30 பொதிகளில் 16 பொதிகளுக்காக ரூபா 743.30 மில்லியன் தொகை மூலதனமாக்கப்பட்ட கிரயத்திற்கு மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்தது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளின் கிரயம் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | 743.30 | பதிவுகள் உரிய கணக்குகளில் பதிவு செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு KE 03 பொதி உட்பட 30 பூர்த்தி செய்யப்பட்ட பொதிகளின் கிரயத்தை நிகழ்ச்சித்திட்டம் மூலதனமாக்கியிருந்த போதிலும் KE 03 பொதியில் உள்ளடங்கிய 25 வீதிகளில் 09 வீதிகளுக்கு கையேற்றல் சான்றிதழ் இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே, பூர்த்தி செய்யப்பட்ட வீதிக்கான கிரயம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,667.84 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும், KU | 3,830.62 | 2023 ஆம் ஆண்டில் KU 03-R ஒப்பந்தப் பொதியின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளின் விபரங்களை ஒப்படைக்கும் நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்படும் வீதிகள் அறிக்கையிடப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை காட்டப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 03-R பொதியின் முழு வீதிகளினதும் கையேற்றல் சான்றிதழ்கள் மீளாய்வாண்டின் இறுதியில் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அந்த வீதிகளின் ரூபா 2,162.78 மில்லியன் சிவில் வேலைக் கிரயம் நிதி நிலைமைக் கூற்றில் பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளின் கிரயத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளின் கிரயம் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | | |
| (இ) | ஐ-வீதி மற்றும் ஐ-வீதி 2 இன் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு தொடர்பாக மீளாய்வாண்டிற்கான ரூபா 18.32 மில்லியன் தொகையான முழுக் கட்டிட வாடகையும் ஒவ்வொரு அலகுக்கும் விகிதாசாரமாக பிரிக்கப்படாமல் ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு அறவிடப்பட்டுள்ளது. எனவே, ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்தின் PMU செலவினம் ரூபா 9.16 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 9.16 | ADB செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் (PAM) பிரகாரம் ஏனைய நிகழ்ச்சித்திட்டத்தின் பயன்பாட்டிற்காக நிதிகளைப் பிரிப்பதற்கான ஏற்பாடுகள் காணப்படவில்லை. | நிகழ்ச்சித்திட்டங்களுக் கிடையில் செலவினங்கள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.05 மில்லியன் பெறுமதியான அலுவலக மென்பொருள், கணனி உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்து பெறுமதி அந்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 1.05 | ரூபா 1.05 மில்லியனில், ரூபா 0.40 மில்லியன் சொத்து கொள்வனவு பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்தது. PMU செலவினத்தின் கீழ் மிகுதித் தொகை அறவிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை காட்டப்பட வேண்டும். |

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிபந்தனையின் 14.6 ஆம் உட்பிரிவு | ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு சான்றிதழின் குறைந்தபட்சத் தொகையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 1.5 சதவீதம் ஆகும். எனினும், 22 RMC பொதிகளின் கீழ் தேவையான வரம்புக்குக் கீழே ரூபா 1,637.27 மில்லியன் தொகையான 131 இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மீளாய்வாண்டில் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. | கொடுப்பனவு பெறுமதிகள் வரம்பிற்குக் குறைவாக இருந்த போதிலும் மாதாந்த கொடுப்பனவுச் சான்றிதழ்களைச் செயன்முறைப்படுத்துவதற்கு ஆலோசகரிற்கு (பொறியியலாளர்) அறிவுறுத்தப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தின் நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட வரம்புகளை பின்பற்றுதல். |
| (ஆ) | ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிபந்தனையின் 14.7 மற்றும் 14.8 ஆம் உட்பிரிவு | ஒவ்வொரு IPC இலும் சான்றுபடுத்தப்பட்ட தொகையை உட்பிரிவின் பிரகாரம் 56 நாட்களுக்குள் தொழில்தருநர் செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 3,147 மில்லியன் தொகையான 84 IPC கொடுப்பனவுகளில் 01 முதல் 793 நாட்கள் வரையிலான தாமதங்கள் காணப்பட்டது. மேலும், தாமத காலப்பகுதியின் போது செலுத்தப்படாத தொகையின் மீது நிதிக் கட்டணங்களை கோருவதற்கு ஒப்பந்ததாரருக்கு உரித்து இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரரின் சமர்ப்பித்தலில் சில ஆவண முரண்பாடுகள் மற்றும் முழுமையின்மைகள் இருக்கலாம். மேலும் பொறியியலாளர் முழு IPC ஐயும் மீளளிக்காமல் காணாமல் போன ஆவணங்களைக் கோருகிறார். | ஒப்பந்தத்தின் நிபந்தனை பின்பற்றப்படுதல். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் 4.2 ஆம் உட்பிரிவு | அதன் பிரகாரம் ஒப்பந்ததாரர் 29 பொதிகளில் பெற்ற செயலாற்றல் பிணைகளின் கிரயத்தை மிள்நிரப்பு செய்வதற்காக ஒப்பந்ததாரர்களுக்கு மேலதிகமாக ரூபா 458.75 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் 2022 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து அந்தத் தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | BOQ இல் செலுத்தும் உருப்படி உள்ளடக்கப்பட்டுள்ளதால் உங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதை அறவிட முடியாது. | ஒப்பந்தத்தின் நிபந்தனை பின்பற்றப்படுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பெறுகை கையேட்டின் 7.9.2 ஆம் பிரிவு | பெறுகைக் கையேட்டின் 7.9.2 ஆம் பிரிவின் பிரகாரம் மிகக் குறைந்த மதிப்பிடப்பட்ட பதிலளிக்கக்கூடிய கேள்வியானது பொறியியலாளரின் மதிப்பீடுகளை கணிசமான வித்தியாசத்தில் மீறினால், பெறுகை நிறுவனம் புதிய கேள்விகளைக் கோர வேண்டும் அல்லது திருப்திகரமான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரருடன் பேச்சுவார்த்தையை நடாத்துதல் வேண்டும். பொறியியலாளரின் 03 பொதிகளின் மதிப்பீட்டை விட விலைகள் கணிசமான அளவு அதிகமாக உள்ளதுடன் இது 5 சதவீதம் முதல் 22 சதவீதம் வரை வேறுபடுகிறது. | எதிர்காலத்தில் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது யதார்த்தமான விலைவிகிதங்களை இணைத்துக் கொள்வதற்கு பொருத்தமான கருத்தில்கொள்ளல்கள் வழங்கப்படும். | பெறுகை வழிகாட்டலை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கேள்வி ஆவணங்களின் 1.6 இன் கீழான விசேட உட்பிரிவு | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் நிலையான கேள்வி ஆவணங்களுக்கு முரணாக ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை அனுமதிப்பதற்கு குறைந்த கணிசமாக பதிலளிக்கும் கேள்விதாரர் அனுமதிக்காத வகையில் கேள்வி ஆவணங்களின் 3 ஆம் பிரிவில் 1.6 இன் கீழ் ஒரு விசேட உட்பிரிவை நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கியிருந்தது. எனவே, மிகக் குறைந்த கணிசமானளவு பதிலளிக்கக்கூடிய கேள்விதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தத் பொதிகளை வழங்க முடியாது. 03 பொதிகளில் வழங்கப்பட்ட இந்த வகையான ஒப்பந்தத்தின் மூலம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக செலவிடப்பட்ட திரண்ட கிரயம் ரூபா 359.30 மில்லியனாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கேள்வி ஆவணத்தின் மதிப்பீடு மற்றும் தகைமை அளவுகோல்கள், கேள்விதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு மிகக் குறைந்த மதிப்பீட்டில் கணிசமாக பதிலளிக்கக்கூடிய கேள்விதாரராக மாறினாலும், ஒரே ஒரு ஒப்பந்தத்தை மாத்திரமே வழங்க முடியும் என்பதை தெளிவாகக் குறிப்பிடுகிறது. | பெறுகை வழிகாட்டலை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

#### (அ) தேசிய மற்றும் கிராமிய வீதிகள்

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் (%) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (%) | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல். | தேசிய மற்றும் கிராமிய வீதிகள் | 92.75 | 62.59 | 370 கிமீ தேசிய வீதிகள் மற்றும் 2,905 கிமீ கிராமிய வீதிகளில் 27.43 கிமீ 4 தேசிய வீதிகள் மற்றும் 2,199 கிமீ 566 கிராமிய வீதிகள் மாத்திரமே 07 ஆண்டுகள் கடந்த பின்னர் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அந்த பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளில் 72.22 கிமீ நீளம் கொண்ட 29 கிராமிய வீதிகள் சில பொதிகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்காத காரணத்தினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கவில்லை. | திறமையற்ற ஒப்பந்தச் செயற்பாடு, எரிபொருள் மற்றும் பொருள் பற்றாக்குறைகள் போன்றன. |

**முகாமைத்துவத்தின் பதில்** 371.54 கிமீ தேசிய வீதிகள் மற்றும் 3093.51 கிமீ கிராமிய வீதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 126.27 கிமீ தேசிய வீதிகள் (7 எண்ணிக்கைகள்) மற்றும் 2791 கிமீ (566 எண்ணிக்கைகள்) கிராமிய வீதிகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக கால எல்லைக்குள் நிகழ்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

**(ஆ) 100,000 கிமீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான புனரமைப்பு வேலைகள்**

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் (%) | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (%) | தாமதம்/ விடயம் கணக்காய்வு | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| R1, R2, KE 1 மற்றும் MA 1 இன் நிறுத்தப்பட்ட பொதிகளின் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல் | கிராமிய வீதிகள் | 100 | 29 | R1, R2, KE 1 மற்றும் MA1 ஆகிய நிறுத்தப்பட்ட பொதிகளில் மீதமுள்ள பணிகள் 100,000 கிமீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தில் நிறுத்தப்பட்ட அதே ஒப்பந்ததாரர்கள் மீண்டும் புனரமைப்பு ஒப்பந்தங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த ஒப்பந்தங்களின் ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதிகள் ரூபா 580.14 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் உள்ளூர் வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம் மூலம் அதே ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் தோல்வியுற்ற ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நன்மைகள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், புதிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும் திகதியிலிருந்து 15 மாதங்களுக்குள் மீதமுள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது, எனினும் 2022 திசெம்பர் 31 இல் | ஒப்பந்ததாரர்களை தெரிவுசெய்வதில் பலவீனம். |

உள்ளவாறு 29 மாதங்கள் கடந்த பின்னர் முன்னேற்றம் 18 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை காணப்பட்டது.

**முகாமைத்துவத்தின் பதில்**

மிகுதிப் பணிகள் 100,000 கிமீ கிராமிய வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்ட முற்பணக் கொடுப்பனவை அறவிடும் நிபந்தனையின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு ஒப்படைக்கப்பட்டது. முற்பணக் கொடுப்பனவுகளின் அறவிடப்படக்கூடிய தொகை இன்னும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

நிகழ்ச்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த நிபந்தனைகளின் உட்பிரிவு 108.4 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் அனைத்து ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்கள் ஒப்பந்ததாரருக்குத் திருப்பியளிக்கப்படும் என்ற போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்களுக்காக ரூபா 397.77 மில்லியன் மொத்த தொகையாக செலுத்தப்பட்டுள்ளது. இதனால் சாதகமான ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நன்மைகளை ஏற்படுத்தலாம் மற்றும் செயற்திட்டக் கிரயம் மேலதிகமாக செலவிடப்படலாம் என்பதை சுட்டிக்காட்டலாம். | எதிர்கால ஒப்பந்தங்களில் இந்தக் கொள்கையை மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும். | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனைகளின் 8.4 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணங்களுக்காக வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் கால நீடிப்புக்கு (EOT) உரித்துடையவராவார். மேலும் ஒப்பந்ததாரரின் திறமையின்மை, மோசமான காலநிலை, பொருட்கள் பற்றாக்குறை, கொவிட் தொற்றுநோய் போன்றவற்றிற்காக EOT வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |
| (i) | 2022 ஆம் ஆண்டில் வட மேல் மாகாணத்தில் 8 பொதிகள் தொடர்பான ஒப்பந்த காலம் பல தடவைகள் நீடிக்கப்பட்டுள்ளது. எனினும், EOT இற்கான நியாயப்படுத்தல்கள் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாகும். | G.C.C இன் 8.4 ஆம் உட்பிரிவின் ஏற்பாட்டிற்கு வெளியே EOTகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரரின் பணிகளை நெருக்கமாகக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | கால நீடிப்பானது 55 முதல் 432 நாட்கள் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் இது வட மேல் மாகாணத்தின் ஆரம்ப ஒப்பந்த காலத்தில் (730 நாட்கள்) 7 சதவீதம் முதல் 59 சதவீதம் வரை பிரதிநிதித்துவப்படுத்தியது. இது செயற்திட்டக் கிரயத்தை மேலதிகமாக செலவிடுவதற்கு சாதகமாக தாக்கம் செலுத்தலாம். | மோசமான காலநிலை, கொவிட் தொற்றுநோய், பொருட்களின் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றின் அடிப்படையில் செயற்திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்த EOT நாட்களின் எண்ணிக்கை வேறுபடும். | ஒப்பந்ததாரரின் பணிகளை நெருக்கமாகக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | முன்கூட்டியே சமர்ப்பிக்கப்பட்ட EOT இற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் நிகழ்ச்சித்திட்டம் மீண்டும் மீண்டும் கால நீடிப்புக்களை வழங்கியிருந்தது. | பொறியியலாளர் அதை மதிப்பீடு செய்து, ஒப்பந்ததாரருக்கு அந்த EOT இற்கு உரித்தான நாட்களின் எண்ணிக்கையை பரிந்துரைப்பார். | ஒப்பந்ததாரரின் பணிகளை நெருக்கமாகக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | ஒப்பந்தப் பொதிகளின் கால நீடிப்புக்களின் திகதி கணிசமான காலத்திற்கு மேல் கடந்திருந்த போதிலும் ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 8.7 ஆம் பிரிவின் பிரகாரம் மேலும் காலநீடிப்பை வழங்குவதற்கோ அல்லது தாமத சேதங்களை அறவிடுவதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | EOT சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஒப்பந்தங்களுக்கு G.C.C இன் 8.7 ஆம் உட்பிரிவின் கீழ் தாமத சேதங்கள் விதிக்கப்படுகின்றன. | ஒப்பந்த நிபந்தனைகளை பின்பற்றுதல். |
| (இ) | 100,000 கிமீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றப்பட்ட ஒப்பந்தப் பொதிகளுடன் தொடர்புடைய வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஒப்பந்ததாரருடன் செய்துகொள்ளப்பட்ட தீர்வு உடன்படிக்கைகளின் பிரகாரம் இரு தரப்பினரும் சான்றுபடுத்தப்பட்ட இடைக்கால விலைப்பட்டியல் கொடுப்பனவு தொகையின் மூலம் அறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்தனர். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 பொதிகளுடன் தொடர்புடைய அறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 963.26 மில்லியனாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்கள் அனைத்துப் பொதிகளிலும் பணிகளைத் தொடங்கியிருந்தனர், ஆனால் தொற்றுநோய் நிலைமை காரணமாக எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியவில்லை. | நிலுவையாகவுள்ள மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | 12 ஒப்பந்தப் பொதிகள் முடிவுறுத்தப்பட்ட பின்னரும் அவை தொடர்பான ரூபா 2,793.41 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை அறவிடுவதற்கு நிகழ்ச்சித்திட்டம் உடனடி நடவடிக்கைகளை எடுத்திருக்காததுடன் அந்த முற்பணங்கள் 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தன. | இந்த பணத்தை அறவிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் PMU எடுத்த போதிலும் ஒப்பந்ததாரர்கள் அதை தடுப்பதற்கு நீதிமன்ற | நிலுவையாகவுள்ள மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தரவுகளை பெற்றுள்ளனர். நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்ததும் முற்பணங்கள் அறவிடப்படும். | |
| (உ) | ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் முடிவுறுத்தப்பட்ட G 01 மற்றும் KL 02 ஆகிய 02 ஒப்பந்தப் பொதிகளின் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்வதற்கு நிகழ்ச்சித்திட்டம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | G1 பொதியின் கீழ் உள்ள வீதிகள் ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்து விலக்கப்பட்டன. நீதிமன்றத் தடை உத்தரவு காரணமாக KL2 ஒப்பந்தத்தின் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 12 முடிவுறுத்தப்பட்ட பொதிகளின் ரூபா 2,618.51 மில்லியன் தொகையான செயலாற்றல் உத்தரவாதங்கள் காலாவதியாகியிருந்தது. எனினும், அந்தத் தொகையை அறவிடுவதற்கு நிகழ்ச்சித்திட்டம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | செயலாற்றல் உத்தரவாதங்களை காசாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கையை எடுத்திருந்த போதிலும் நீதிமன்ற நடவடிக்கைகளை இறுதி செய்யும் வரை இதனை அறவிட முடியாது. | பிணைகளை உடனடியாக காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2006 இன் பெறுகை வழிகாட்டல்களின் 8.9.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியானது ரூபா 500 மில்லியனிற்கு மேல் இருந்தால் ஒப்பந்த உடன்படிக்கை வரிசை அமைச்சின் செயலாளரால் கையொப்பமிடப்பட வேண்டும். எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் வரம்பிற்கு மேற்பட்ட 75 சிவில் வேலை ஒப்பந்தங்கள் மற்றும் 4 ஆலோசனை ஒப்பந்தங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரால் கைச்சாத்திடப்பட்டுள்ளன. | 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் RDA இன் தலைவர் RDA உடன் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளார். ஏனெனில் RDA ஆனது RDA நிர்மாண ஒப்பந்தங்களின் தொழில்தருநராகும். | பெறுகை வழிகாட்டலைப் பின்பற்றுதல். |

(ஏ) **தனிப்பட்ட ஆலோசனை**

(1) **பெறுகை நிபுணர்**

2015 ஆகஸ்ட் 20 இல் முடிவடையும் 132 காலப்பகுதிக்கு 2015 சனவரி 15 இல் ஒரு பெறுகை நிபுணரை ரூபா 2.84 மில்லியனுக்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆட்சேர்ப்பு செய்திருந்தது. ஒப்பந்தம் 11 முறை நீடிக்கப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கொடுப்பனவு ரூபா 56.91

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனாக இருந்ததுடன் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்தத் தொகைக்கு மேலதிகமாக ரூபா 6.33 மில்லியன் போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டுள்ளது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை நிபந்தனைகளை பின்பற்றுதல். |
| (ii) | ஐவீதி மற்றும் ஐவீதி 2 நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுகை நடவடிக்கைகள் ஒரே பெறுகை நிபுணரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், ரூபா 56.91 மில்லியன் மொத்த செலவினம் ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினமாக இரு நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் செலவினத்தை விகிதாசாரமாகப் பகிர்ந்தளிக்காமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆலோசகர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். ஐவீதி மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த அனைத்து அதிகாரிகளும் ஐவீதி II இல் பணிபுரிகின்றனர். | நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் செலவினங்கள் நியாயமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |
| (2) | **ஆவண நிபுணர்** | | |
| | ஆவண நிபுணர் ஒருவர் 2018 ஏப்ரல் 02 இல் 12 மாத காலப்பகுதிக்கு நாளொன்றிற்கு ரூபா 13,500 விலைவிகிதத்தில் நிகழ்ச்சித்திட்டத்தால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் நிகழ்ச்சித்திட்டத்தினால் ரூபா 20.03 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | இந்த நியமனத்திற்கான ADB இணக்கப்பாடு கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த பதவி நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாகக் கையேட்டில் ஆவண நிபுணரின் பதவிநிலை உள்ளடக்கப்படவில்லை, எனவே ADB இன் இணக்கப்பாடு அவசியமில்லை. | ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | ஐவீதி மற்றும் ஐவீதி 2 நிகழ்ச்சித்திட்டங்களின் ஆவணச் செயற்பாடுகள் ஒரே ஆவண நிபுணரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், ரூபா 20.03 மில்லியன் மொத்த ஒதுக்கீடு ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினமாக இரு நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் செலவினத்தை விகிதாசாரமாகப் பகிர்ந்தளிக்காமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஐ வீதி நிகழ்ச்சித்திட்டங்களின் எந்தவொரு குறிப்பிட்ட கட்டத்திற்கும் இந்த பதவிநிலை குறிப்பிடப்படவில்லை. மேலும் செயற்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் ஆலோசகரின் உதவி பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் செலவினங்கள் நியாயமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 15,358 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும் உண்மையான செலவினம் ரூபா 14,501.12 மில்லியனாக இருந்தது. எனவே 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு ரூபா 856.88 மில்லியனாக இருந்தது. எனினும் அந்த திகதியில் உள்ளவாறு ஒப்பந்தங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 3,582.24 மில்லியனாக இருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | இக் காலப்பகுதியின் போது நிகழ்ச்சித்திட்ட நிதிகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 மேலதிகக் கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 183.52 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.13 மில்லியன் தொகையான திரண்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்படாத கடன் பெறுவனவுகளில் கடன் வழங்கும் முகவராண்மைக்கு சிக்கனமற்ற முறையில் நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | கடன் தவணைகளில் பெறப்படுகிறதுடன் திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் கடனைப் பயன்படுத்துவதன் மூலம் கடப்பாட்டுக் கட்டணம் குறைக்கப்படும். | கடன் நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 செயற்திட்டக் கண்காணிப்பு அலகு தொடர்பான சிக்கல்கள்

| முக்கிய பதவியணி நிலை | PMU இல் சேவையின் காலப்பகுதி | ஏனைய நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனரா | ஒப்பந்த அடிப்படையில்/ பதிற்கடமை அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டது | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| செயற்திட்ட பணிப்பாளர் | 26 மாதங்கள் | ஆம் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) | பதிற்கடமை அடிப்படை | முழுநேர செயற்திட்ட பணிப்பாளரை நியமனம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்திட்ட பணிப்பாளர் எப்போதும் முழு நேர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும். |

## 3.6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாகம் மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தலை மேற்பார்வை செய்து, கண்காணித்து, ஒருங்கிணைப்பதற்கு குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை செயற்திட்ட வழிநடாத்தல் குழு நடாத்தப்பட வேண்டும். எனினும், 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் மற்றும் 3 ஆம் காலாண்டில் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. | அனைத்து வழிநடாத்தல் குழுக்களும் நிர்ணயிக்கப்பட்ட முறையில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில்தருநர் மற்றும் ஆலோசகரின் பதவியணியினரிற்கு வசதியளிப்பதற்காக ரூபா 1,778.73 மில்லியன் கிரயத்தில் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 166 வாகனங்கள் மற்றும் 164 மோட்டார் சைக்கிள்கள் 2020 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் பேணியிருக்காததுடன் அந்தச் சொத்துக்கள் தொடர்பான பொருள் மெய்மையாய்வை நடாத்தத் தவறியிருந்தது. எனவே, அந்த சொத்துக்களின் இருக்கும் தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | இந்த சொத்துக்கள் இயந்திரவியல் பிரிவு அல்லது அவர்களின் RDA அல்லது பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது டன் கையேற்றல் கடிதங்கள் எங்களிடம் உள்ளன. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |